செ.வெ.எண்:05/2016 நாள்:06.09.2016

சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு பள்ளிப் படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க 30.09.2016 வரை கால நீட்டிப்பு

தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மைய அரசால் அறிவிக்கப்பட்ட சிறுபான்மையினரான இஸ்லாமியர், கிறித்துவர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தைச் சார்ந்த மாணவ/மாணவியர்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கு பள்ளிப் படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டங்களில் (புதுப்பித்தல் மற்றும் புதியது) ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க ஏற்கனவே 31.08.2016 வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தற்போது மேற்படி பள்ளி படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க 31.08.2016-லிருந்து 30.09.2016 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினத்தைச் சார்ந்த தகுதியுள்ள அனைத்து மாணவ/மாணவியரும் **www.scholarships.gov.in** என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலமாக கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பித்து பயனடையுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.